மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சப்-கோர்ட்டு என்று ஒன்று தற்போது இல்லை. கரூருக்கும், துறையூருக்கும் கூடுதல் நீதிமன்றம் வேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார் என்று கருதுகிறேன். போதிய வழக்குகள் இல்லாத காரணத்தினால் கரூருக்கே வேண் டாம் என்று உயர் நீதிமன்றம் கூறி இருக்கிறது.

கூட்டுறவு விவசாய சங்கத்தின் மூலம் வண்டி மாடுகள் வாங்க கடன்.

*வினா எண். 439— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) கலசபாக்கம் தொகுதியில் உள்ள வள்ளிவாகை, சொர குளத்தூர் ஆகிய கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தில் 1978–79ல் வண்டி மாடு கடன் கொடுப்பதாக அங்கத்தி னர்களிடம் பங்குத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை? எத்தனை அங்கத் தினர்களிடம் வசூலிக்கப்பட்டது ?

(இ) அனைவருக்கும் கடன் கொடுக்கப்பட்டு விட்டதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) ரூபாய் 32,793 அளவிற்கு 306 உறுப்பினர்களிட மிருந்து வசூலிக்கப்பட்டது.

(இ) 238 உறுப்பினர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வள்ளிவாகை, சொரகுளத்தூர் ஆகிய இரண்டு சங்கங்களில் மட்டுமல்லாது, மாவட்டத்தில் உள்ள பல் வேறு சங்கங்களில், பல்வேறு விவசாயத் தொழிலாளர்கள், ஏழை அரிசனங்கள் உறுப்பினர்களாகி, வண்டி, மாடு பெறுவதற் காக நிறைய பேர்களிடம் பங்கு பணம் வசூலித்து, மிகவும் குறைந்த பேர்களுக்கு மட்டும் கொடுத்திருக்கிறார்கள். மற்ற வர்களுக்குக் கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள். அப்படி நிறுத் தப்பட்டவர்களுக்கு கடனாவது தரவேண்டும். அல்லது அவர் களிடம் இருந்து பெற்ற பங்குப் பணத்தையாவது திருப்பித் தர வேண்டும். இதுகுறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1981 மார்ச் 23]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட உறுப்பினர்கள் இந்தக் கூட்டுறவு அமைப்பிலே அங்கத்தினராக இருக்க விரும்பவில்லை என்றால் அவர்கள் விலகிச் செல்வதாக இருந்தால் அதற்கு அரசு தனியாக உத்தரவு இட வேண்டியதில்லை. அவர்களே விலகிச் சென்று டெப்பாசிட் தொகையை கேட்டுத் திரும்பப் பெற்றுச் சென்று விடலாம். ஆனால் உழவு மாடுகள், போன்றவை வாங்குவதற்காக அவர்களுக்குப் போதிய கடன்கள் கொடுக்கப் படவில்லை என்ற பிரச்சினையைப் பொறுத்த வரையிலும் மத்தியக் காலக் கடன் வழங்குவதற்கு ரிசர்வ் வங்கி ஒதுக்கீட்டை அதிகமாக செய்யவில்லை. அந்த ஒதுக்கீட்டுக்கு உட்பட்டு இந்த உதவிகள் எல்லாம் செய்யப்பட்டுவிட்ட காரணத்தால், அதற்கும் மேலே வழங்கவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, ஒருவர் உறுப்பினராக இருக்க அந்த ஒரு ரூபாய் 12 காசு செலுத்தினாலே போதும், அவர்கள் அங்கத்தினராக இருக்கலாம். ஆனால் அந்த அங்கத்தினராக இருக்கிற பல்வேறு விவசாயிகள் அல்லது ஏழை அரிசனங்கள் நடுத்தரக் குடும்பங்களிலே உள்ளவர்களிடம் இருந்து கடன் கொடுப்பதற்காக பங்கு பணத் தொகையை வசூலித்து இருக்கிறார்கள். சில பேர்களுக்குத்தான் தந்திருக்கிறார்கள். பல்பேர்களுக்குத் தரவில்லை. அப்படித் தரப்படாதவர்களுக்கு ஒன்று கடன் தரவேண்டும். அல்லது அவர்களுடைய பங்கு பணத்தை திருப்பித்தரவேண்டும். அதிகாரிகள் சொல்லுகிறார்கள், விதிப்படி 3 ஆண்டுகள் கழித்துத்தான் அந்த பங்கு பணத் தொகை திருப்பித்தரப்படும் என்று சொல்லுகிறார்கள். இப்போது அவர்கள் அங்கே அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய பங்குத் தொகை இருக்கலாம். ஆனால் இந்தக் கடனுக்காக பிரத்தியேகமாக செலுத்தப்பட்ட பங்குத் தொகையை, ஒன்று கடன் தரவில்லை என்றால் திருப்பித் தருவதற்கு அரசாங்கம் தனியாக உத்திரவிடவேண்டும். அதைத்தான் அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிபாசிட் வாங்குவதும், அதைத் திருப்பிக் கொடுப்பதும் ஒரு சில தனிப்பட்ட விதிகளின் அடிப்படையில் செய்யப்பெறுகின்றது. கடன் வழங்குவது என்பது ஒரு சில தனிப்பட்ட விதிகளின் அடிப்படையில் செய்யப்படுகின்றது. கடன் வழங்குவது என்பது குறிப்பிட்ட அளவிற்கு ஒதுக்கப்பட்ட தொகை அளவிற்குத்தான் செய்ய முடியும். அப்படி ஒதுக்கப்பட்ட அளவிற்குக் கடன்கள் தந்துவிட்ட காரணத்தால், மேற்கொண்டு கடன்கள்—மாடு வாங்குவது போன்றவற்றிற்கு வழங்கமுடியவில்லை. டிபாசிட் போட்டதற்கு இன்டரஸ்ட் வழங்கப்படுகிறது. குறிப்பிடட் எந்த கால

அளவிற்கு அந்த டிபாசிட் போட்டார்களோ, எந்தக் கன்டிஷனில் அந்த டிபாசிட் செய்தார்களோ அது நிறைவு பெற்றவுடன் அந்தத் தொகை திருப்பித் தரப்படும்.

கிராம கூட்டுறவு வங்கி ஊழியர்களின் சம்பளம்

*வினா எண். 440— திரு. கு. ரமணி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் உள்ள கிராமக் கூட்டுறவு வங்கிகளில் வருமானம் குறைந்துவிட்டது என்ற காரணத்தால் ஊழியர்களுக்கு மாதச் சம்பளங்கள் ஏராளமான வங்கிகள் கொடுக்காமலிருந்து வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மாவட்ட வாரியாக எவ்வளவு கிராம வங்கிகளில் சம்பளம் கொடுக்கப்படாமலிருக்கிறது ?

(இ) இதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) கடன் வசூலிக்காமல் இருப்பதால் சம்பளம் கொடுக்க பணம் இல்லாத நிலை கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்பட்டுள்ளது.

(ஆ) மாவட்ட வாரியாகச் சம்பளம் வழங்கப்படாமல் இருக்கும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் :—

செங்கற்பட்டு	48
வட ஆற்காடு	136
தென் ஆற்காடு	68
தஞ்சாவூர்	136
திருச்சி	7
இராமநாதபுரம்	101
மதுரை	48
திருநெல்வேலி	134
கோவை மற்றும் பெரியார்	126
சேலம்	13
தர்மபுரி	110
ஆக மொத்தம்	927

இருக்கின்றன.